©
GOVERNMENT OF TAMIL NADU
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No.197/2009.
[Price: Rs. 1.60 Paise.

தமிழ்நாடு அரசிதழ்

சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 373A] சென்னை, வியாழக்கிழமை, செப்டம்பர் 3, 2026
ஆவணி 17, பராபவ, திருவள்ளுவர் ஆண்டு–2057

பகுதி IV—பிரிவு 1

தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 17/2026

2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சட்டத்தை திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்தியேழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 37/2025.

2. 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) 2 ஆம் பிரிவின் (c) மற்றும் (r) கூறுகளானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

24 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "நிலைய அலுவலர் படிநிலைக்குக் குறையாத" எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

31 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(1) இந்தச் சட்டத்தின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஒரு கட்டடத்திற்கு தனியாகவோ அல்லது கூட்டாகவோ பொறுப்புடைய உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் எவரும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளுக்கு இணங்கிய வகையில், அந்தக் கட்டடத்தில் தீத்தடுப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு வகைசெய்தல் வேண்டும். மேலும், அந்தக் கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரானவர்,–

(a) 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டட விதிகள்;

(b) எண்ணெய் தொழில்துறை பாதுகாப்பு இயக்குநரகத்தால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்கள்;

(c) 1934 ஆம் ஆண்டு பெட்ரோலியச் சட்டம் (மையச் சட்டம் 30/1934) மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகள்;

(d) 1884 ஆம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (மையச் சட்டம் IV/1884) மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகள்;

(e) அரசு அல்லது ஏதேனும் பிற தொடர்புடைய அதிகார அமைப்பு எதனாலும் வெளியிடப்பட்ட ஏதேனும் பிற வழிகாட்டுதல்கள்; மற்றும்

(f) அப்போதைக்கு நடைமுறையில் உள்ள ஏதேனும் பிற சட்டம்,

ஆகியவற்றின்கீழ் வகுத்துரைக்கப்பட்டுள்ள தீத்தடுப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் வகைசெய்தல் வேண்டும்."

நோக்கக் காரண விளக்கவுரை.

நுகர்வோர் விவகாரங்கள் துறையின்கீழ் இயங்கும் இந்தியத் தரநிர்ணய நிறுவனம், 30.04.2026 ஆம் தேதியிட்ட அரசிதழ் அறிவிக்கையின் மூலம், 2016 ஆம் ஆண்டு இந்திய தேசிய கட்டட விதித்தொகுப்பை திரும்பப் பெற்றுள்ளது. மேலும், 2026 ஆம் ஆண்டு வணிகச் சீர்திருத்தச் செயல் திட்டத்தின்கீழ் முன்னுரிமைப் பகுதி எண் 5, அதாவது, கட்டுமான அனுமதி மற்றும் கட்டட ஒழுங்கு விதிகள் தொடர்பான, சீர்திருத்த நடவடிக்கை எண்கள். 53, 54 மற்றும் 55 ஆகியவற்றின் அடிப்படையில், கட்டடம் தொடர்பான சட்டங்களிலிருந்து தேசிய கட்டட விதித்தொகுப்பு தொடர்பான குறிப்புகளை நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாக தாராளமயமாக்கப்பட்ட மற்றும் நவீனத் தரநிலைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் தீத்தடுப்பு மற்றும் கட்டட விதிமுறைகளை நவீனப்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2. 2026 ஆம் ஆண்டு வணிகச் சீர்திருத்தச் செயல் திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட பரிந்துரைகளைக் கவனமாகப் பரிசீலனை செய்த பிறகு, அதற்கேற்ப 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 37/2025) தக்கவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

ச. ஜோசப் விஜய்,
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2026 செப்டம்பர் 3.

இரா. சாந்தி,
செயலாளர்.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.